டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 17.03.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 23 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 221 - Madurai | Online Edition

# வேளாண் உணவு முறைகளில் மகளிர் குறித்த உலகளாவிய மாநாடு நிறைவு

புது தில்லி, மார்ச் 16

வேளாண் உணவு முறைகளில் பெண்கள் குறித்த உலகளாவிய மாநாடு (GCWAS-2026) சனிக்கிழமை புதுதில்லியில் நிறைவடைந்தது.

வேளாண்மை, வேளாண் உணவு முறைகளில் பெண்களின் தலைமை, மற்றும் புதுமைகளை வலுப்படுத்துவதற்கான வலுவான அழைப்போடு இந்த மாநாடு முடிவடைந்தது. பாலின சமத்துவத்துடன் நிலையான விவசாய மேம்பாட்டில் கவனம் செலுத்தும் வகையில் இந்த மூன்று நாட்கள் உலகளாவிய மாநாடு நடைபெற்றது.

வேளாண் உணவு முறைகளில் பெண்கள் அதிகாரமளிப்பதன் முக்கியமான பரிமாணங்களைக் கையாளும் ஒன்பது கருப் பொருள்களில் தொழில்நுட்ப அமர்வுகள் இந்த மாநாட்டில் இடம் பெற்றன.

இந்த அமர்வுகள் பெண்களின் தலைமையை வலுப் படுத்துதல், சந்தைகளுக்கான அணுகலை மேம்படுத்துதல், தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வதை ஊக்குவித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தின.

முன்னதாக மத்திய வேளாண்மை அமைச்சர் சிவராஜ் சிங் சௌஹான் முன்னிலையில், குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு மார்ச் 12ல் இந்த மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.

விவசாயம், உணவு முறைகளில் பெண்களின் முக்கிய பங்கை அங்கீகரித்து வலுப்படுத்துவதில் இந்தியாவின் உறுதிப்பாட்டை இந்த மாநாடு எடுத்துக் காட்டுகிறது.

# நத்தம் அருகே செந்துறையில் வாழ்வாதார சேவை மையம் திறப்பு

திண்டுக்கல், மார்ச் 16

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் அருகேயுள்ள செந்துறை ஊராட்சியில் ஒருங்கிணைந்த வாழ்வாதார சேவை மையம் திறக்கப்பட்டுள்ளது.



செந்துறையில் வாழ்வாதார சேவை மையத்தை திட்ட இயக்குநர் சதீஸ் பாபு தொடங்கி வைத்தார்

இந்த மையம் செந்துறை, பிள்ளையார்நத்தம், சேத்தூர் ஆகிய மூன்று ஊராட்சிகளை உள்ளடக்கிய இந்த மையத்தில், தலா 300 மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பு விளைபொருட்களை அடிப்படையாகக் கொண்டு வாழ்வாதார மேம்பாட்டு சேவைகள் வழங்கப்படும்.

மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் அடிப்படை விவரங்கள் சேகரிக்கப்பட்டு, மகிளா கிசான் போர்ட்டலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மூன்றாண்டுகளுக்கு மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு, ஆண்டு முழுவதும் நிலையான வருமானம் கிடைப்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

வேளாண்மை, கால்நடை வளர்ப்பு விளைபொருட்களை தரம் பிரித்து விற்பனை செய்தல், மதிப்பு கூட்டி விற்பனை செய்தல் ஆகியவை மையத்தின் முக்கிய நோக்கங்கள்.

இப்பகுதி விவசாயிகளுக்கு தேவையான விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள், கால்நடை தீவனம், மருந்துகள் வழங்குதல், தொழில்நுட்ப பயிற்சி அளித்தல், தொழில் திட்ட அறிக்கை தயாரித்து கடன் உதவி பெற்றுத் தருதல் போன்ற சேவைகள் இங்கு கிடைக்கும்.

மூன்றாண்டுகளில் தற்சார்பு அடைந்து உழவர் உற்பத்தியாளர் நிறுவனமாக மாற்றம் பெறுவதே இத்திட்டத்தின் முக்கிய இலக்கு என திட்ட இயக்குநர் சதீஸ் பாபு தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் நத்தம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தேவராஜ், தோட்டக்கலை உதவி இயக்குநர் முகமது ஆசிப், உதவி கிட்ட அலுவலர் அருண்குமார், மாவட்ட வளப் பயிற்றுநர் குமார், வட்டார மேலாளர் பிரமிளா தேவி, ஒருங்கிணைப்பாளர் கலையரசி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**






அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# மண்புழு உர வடிநீர் தயாரித்தல்




மண்புழு உர வடிநீரானது மண்புழு உர பாத்திகளிலிருந்து சேகரிக்கப்படும் ஒரு திரவச் சாறு ஆகும். மண்புழு வடிநீரில் என்சைம்கள், தாவர ஹார்மோன்கள் வைட்டமின்கள், பேரூட்டம் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களைக் கொண்டு உள்ளதால் தாவரங்களை நோய் தாக்குதலிருந்து பாதுகாத்து பயிர்களின் வளர்ச்சியை அதிகரிக்கிறது.

இன்றைய விவசாயத்தில் செயற்கை உரங்கள், களைக் கொல்லிகள் மற்றும் பூச்சிக் கொல்லிகளை அளவுக்கு அதிகமாக பயன்படுத்துவதால் சுற்றுப்புறச் சூழல் மாசுபடுகிறது. இந்த மாசுபாட்டைக் குறைக்க சுற்றுச்சூழலை பாதிக்காத அங்கக இடுபொருட்களான மண்புழு உரம் மற்றும் மண்புழு வடிநீரைப் பயன்படுத்தலாம்.

இயற்கையில் கிடைக்கக் கூடிய தாவரக் கழிவுகளை மண்புழு உணவாக உட்கொண்டு குடலில் உள்ள நுண்ணுயிரிகளின் நொதிகள் மண்புழுக்கள் மூலம் செரிக்கப்பட்டு சிறு சிறு உருண்டைகளாக மலப்புழை வழியாக வெளித்தள்ளப்படும் கட்டிகளே மண்புழு உரம்.மண்புழு உர வடிநீர் என்பது திரவ நுண்ணுயிர் உரமாகும். இது உயிர்ப்புடன் இருக்கும் மண்புழு, மட்கிய சாணம் மற்றும் மண்புழு உரத்தின் மீது பட்டுக் கிடைக்கும் வடிநீரே மண்புழு உர வடிநீர் ஆகும். மண்புழுவின் குடலில் சுரக்கும் நீரானது மண்புழுவின் மேல்புறதோலின் வழியாக

வெளியேற்றப்படுகிறது.மண்புழுக்கள் மற்றும் நன்மை செய்யும் நுண்ணுயிர்களிடமிருந்து வெளியேறும் என்சைம்கள், தாவரச் சத்துக்கள், வைட்டமின்கள், தாவர வளர்ச்சியை ஊக்கு விக்கும் பொருட்களும் அடங்கியுள்ள தொகுப்பே வெர்மிகேஸ்ட் எனப்படுகிறது. வெர்மிகாஸ்ட்டில் கரையக்கூடிய பொட்டாசியம், கால்சியம் மற்றும் மக்னீசியம் சத்துக்கள் மற்றும் தாவர வளர்ச்சி ஊக்கிகளான (ஆக்சின்கள் மற்றும் சைட்டோகைனின்) நைட்ரஜனை நிலைப்படுத்தும் பாக்டீரியா மற்றும் பாஸ்பரஸை கரைத்து தரக் கூடிய பாக்டீரியாக்களும் அடங்கியுள்ளன.

### மண்புழு உர வடிநீர் தயாரிக்க தேவையான பொருட்கள்

- 250 லி கொள்ளளவு கொண்ட பீப்பாய்
- மணல்
- மண்புழுக்கள்
- சாணம்
- தாவரக்கழிவுகள் மற்றும் நீர்

### மண்புழுக்களின் வகைகள்

யூடிரிலஸ், யுஜீனியா, யூசினா போட்டிடா போன்ற மண் புழுக்கள் எல்லா தட்ப வெப்ப நிலைகளைத் தாங்கி வளரக் கூடியது. எனவே, மண்புழு உரம் வர்த்தக ரீதியாக தயாரிக்க இந்த வகை மண்புழுக்கள் பயன்படுத்தலாம்.

### மண்புழு உர வடிநீர் உற்பத்தி செய்தல்

250 லிட்டர் கொள்ளளவு கொண்ட பிளாஸ்டிக் பேரல்களை எடுத்துக் கொள்ள வேண்டும். பேரல்களின் அடிப்பாகத்தில் 100 செ.மீ உயரத்திற்கு கூழாங்கற்கள், மணல் நிரப்ப வேண்டும். இதில் நன்றாக மட்கிய பண்ணைக் கழிவுகள்,மாட்டு எருவை பேரல்களின் மேற்பகுதி வரை நிரப்ப வேண்டும். இதன் மேல் பகுதியில் 2000 மண்புழுக்களை விட வேண்டும். 7 முதல் 10 நாட் களுக்கு நீரினை தெளிக்க வேண்டும். 10 நாட்களுக்குப் பிறகு பீப்பாயின் மேல்பகுதியில் ஒரு வாளியை வைத்து தொடர்ந்து சொட்டு சொட்டாக தண்ணீர் விழுமாறு பார்த்துக் கொள்ளவும். தினமும் 4-5 லிட்டர் அந்த வாளியில் ஊற்றி சொட்டு சொட்டாக விழுமாறு பார்த்துக் கொள்ளவும். பிறகு தினமும் 3-4 லிட்டர் வரை உற்பத்தி செய்யலாம். கீழே உள்ள வாளியில் சேகரித்துக் கொள்ளலாம்.

### மண்புழு உர வடிநீரில் உள்ள சத்துக்களின் அளவு

| **சத்துக்கள்** | **அளவு** |
|---|---|
| கார அமிலத் தன்மை | 7.48 |
| கரிம கார்பன் | 0.008 % |
| நைட்ரஜன் | 0.01 % |
| பாஸ்பரஸ் | 1.69 % |
| பொட்டாசியம் | 25 பிபிஎம் |
| சோடியம் | 8 பிபிஎம் |
| கால்சியம் | 3 பிபிஎம் |
| காப்பர் | 0.01 பிபிஎம் |
| இரும்பு | 0.06 பிபிஎம் |

| | |
|---|---|
| மெக்னீசியம் | 158.44 பிபிஎம் |
| மாங்கனீசு | 0.58 பிபிஎம் |
| துத்தநாகம் | 0.02 பிபிஎம் |

**மண்புழு உர வடிநீரைப் பயன்படுத்தும் முன் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்**

● மண்புழு வடிநீர் தயாரிக்கும் கலன்களிலிருந்து 10 நாட்களுக்கு பிறகு மண்புழு வடிநீரை சேகரிக்க வேண்டும்.

● மண்புழு வடிநீரை உலர்ந்த நிழலான பகுதியில் சேகரித்து வைக்க வேண்டும்.

● மண்புழு வடிநீர் தயாரிக்கும் கலன்களில் தண்ணீர் சொட்டு சொட்டாக விழுமாறு தண்ணீரை ஊற்ற வேண்டும். பிறகு தண்ணீர் ஊற்றும் போது கலன்களில் உள்ள மட்காத பண்ணைக் கழிவு மற்றும் சாணத்தைக் கலக்கக் கூடாது.

● மட்காத பசுமையாக உள்ள பண்ணைக் கழிவுகளை சேர்க்கக் கூடாது.

● கலன்களில் அதிகமாக பண்ணைக் கழிவுகளை தணிக்கக் கூடாது.

**பயன்கள்**

● மண்புழு உர வடிநீர் பயிர்களுக்கு பூச்சி மற்றும் நோய் தாக்குதலிலிருந்து எதிர்ப்புத் திறனை வழங்குகிறது.

● இது காய்கறி பயிர்களில் பூக்கும் மற்றும் காய்க்கும் திறனை அதிகப்படுத்துகிறது.

● மண்புழு உர வடிநீரை 20-30 சதவீதத்தில் நீருடன் கலந்து பயிருக்கு தெளிக்கும் போது நோய்களை உருவாக்கும் பூஞ்சைகளை கட்டுப்படுத்துகிறது.

● மண்புழு உர வடிநீரை 10 சதம் கோமியம் (அ) வேம்புக் கரைசல் சேர்த்து பயன்படுத்துவதால் உயிர் பூச்சிக்கொல்லியாக செயல்படுகிறது.

● மண்புழு உர வடிநீரானது மண், நீர், தாவரங்கள் மற்றும் சுற்றுச்சூழலை பாதிக்காத இயற்கை உரமாகும்.

மண்புழு உர வடிநீரானது திரவ அங்கக உயிர் உரமாகும். அங்கக வேளாண்மையில் பயன்படும் ஒரு முக்கிய உயிர் உரமாகும். இது மண் வளத்தையும் நோய் எதிர்ப்புத்திறனையும் வழங்கி பாதுகாப்பான விவசாயத்தை குறைந்த முதலீட்டில் பெறலாம்.

தகவல் : **ஜெ.ஜெயசித்ரா மற்றும் செல்விரமேஷ், மண்டல ஆராய்ச்சி நிலையம், அருப்புக்கோட்டை, ஜெ.கண்ணன், வேளாண்மை அறிவியல் நிலையம், அருப்புக்கோட்டை.**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# வாசனை பயிர்கள் சாகுபடி குறித்த மாநில அளவிலான கருத்தரங்கு



தேனி, மார்ச் 16

வாசனை மற்றும் மலைத்தோட்டப் பயிர்கள் துறை, தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், பெரியகுளம் மற்றும் பாக்கு & வாசனைப் பயிர்கள் மேம்பாட்டு இயக்கம், இந்திய அரசு, கோழிக்கோடு, கேரளா இணைந்து வாசனைப் பயிர்களில் உயர் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த மாநில அளவிலான பயற்சி/ கருத்தரங்கம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பெரியகுளத்தில் கடந்த 9 மற்றும் 10ம் தேதிகளில் நடைபெற்றது.

மாநில அளவிலான கருத்தரங்கை முனைவர் கே.சரஸ்வதி, முதல்வர், தோட்டக்கலை கல்லூரி, பெரியகுளம், தலைமை தாங்கி தலைமை துவக்கி வைத்தார். அவர் தனது தலைமை உரையில் வாசனை பயிர்கள் சாகுபடி செய்வதன் முக்கியத்துவத்தை புற்றி விரிவாக கறினார். இந்தியா வாசனைப் பயிர்கள் உற்பத்தி மற்றும் உற்றுமதி செய்வதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியாவில் வாசனைப் பயிர்கள் 4.76 மில்லியன் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு 11.80 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது என்றார்.

முனைவர் ம.ஜெயக்குமார், துணை இயக்குநர், ஆராய்ச்சி, மண்டல காபி ஆராய்ச்சி நிலையம், காபி வாரியம், இந்திய அரசு, தாண்டிகுடி, துவக்க உரை ஆற்றினார். தனது துவக்க உரையில் மேம்படுத்தப்பட்ட சாகுபடி தொழில்நுட்பங்கள், புதிய இரகங்கள், சொட்டுநீர் பாசனம், பயிர் பாதுகாப்பு முறைகள் மூலம் மகசூலை அதிகரிக்க முடியும் எனக் கூறினார்.

முனைவர் த.பிரபு, இணை பேராசிரியர் & தலைவர், வாசனை & மலைத் தோட்டப் பயிர்கள் துறை, தோட்டக்கலை கல்லூரி & ஆராய்ச்சி நிலையம், பெரியகுளம் & ஆராய்ச்சி திட்டத்தின் முதன்மை விஞ்ஞானி, அனைவரையும் வரவேற்று ஆராய்ச்சி திட்டத்தின் நோக்கங்கள் பற்றி விரிவாக கூறினார். மேலும் இந்த இரண்டு நாள் சாகுபடி கருத்தரங்கை ஒருங்கிணைத்து நடத்தினார்.

முனைவர் எஸ்.முத்துலட்சுமி, முனைவர் கே.ஆர்.இராஜதுரை மற்றும் முனைவர் கே.கல்பனா போன்ற பல்வேறு துறைகளின் பேராசிரியர் & தலைவர்கள் கருத்தரங்கம் சிறப்புற நடைபெற வாழ்த்துரை வழங்கினார்கள்.

தொழில்நுட்ப உரையில் முனைவர் த.பிரபு, மிளகு மற்றும் ஏலக்காய் சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றியும், முனைவர் ம. ஜெயக்குமார், இஞ்சி மற்றும் மஞ்சள் சாகுபடியில் உயர் தொழில்நுட்பங்கள் குறித்தும், முனைவர் சா.செண்பகவள்ளி, வாசனைப் பயிர்களின் கழிவுகளை பயன்படுத்தி மண்வளத்தை மேம்படுத்துவது பற்றியும், முனைவர் கே.கல்பனா, வாசனைப் பயர்களில் பூச்சி நோய் மேலாண்மை பற்றியும், செந்தில் குமார், உதவி இயக்குநர், வாசனைப் பயிர்கள் வாரியம், இந்திய அரசு, போடி, வாசனை பயிர்களில் அறுவடை பின்சார் தொழில் நுட்பங்கள் மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்து விரிவாக கூறினார்கள்.

வாசனைப் பயிர்கள் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த மடிப்பிதழ்கள் வெளியிடப்பட்டு அனைத்து விவசாய பெரு மக்களுக்கும் வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து 240 விவசாய பெருமக்கள் பங்கு பெற்று பயன் அடைந்தனர்.

முனைவர் சா.சென்பகவள்ளி, நன்றி உரை வழங்கினார்.

இரண்டாம் நாள் (10.03. 26) அனைத்து விவசாயிகளும் கண்டுனர் சுற்றுலா அழைத்து செல்லப்பட்டனர்.

இந்த கண்டுனர் சுற்றுலா மூலம் வாசனை பயிர்கள் வாரியம், இந்திய அரசு, போடி, ஏலக்காய் வர்த்தக முறை மற்றும் வாசனை பயிர்களில் மதிப்பு கூட்டுதல் & சந்தைப்படுத்துதல் பற்றியும் விளக்கமாக தெரிந்து கொண்டனர்.

# நாட்டு மாடு இனங்களை காப்போம் மாணவர்கள் விழிப்புணர்வு பேரணி



திருச்சி, மார்ச் 16

திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம் அந்தநல்லூர் பகுதியில் அமைந்துள்ள அம்மன்குடி கிராமத்தில், தனலெட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக இறுதி ஆண்டு வேளாண்மை வேளாண் பயிலும் மாணவர்கள், தங்களின் கிராமப்புற பணிப்பயிற்சி (RAWE) திட்டத்தின் ஒரு பகுதியாக அந்தநல்லூரில் உள்ள கணபதி மேட்ரிகுலேசன் பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டு "நாட்டு மாடு இனங்களை காப்போம்" என்ற தலைப்பில் விழிப்புணர்வு பேரணி நடத்தினர்.

இந்த நிகழ்ச்சி நாட்டு மாடு இனங்களின் முக்கியத்துவத்தை பொதுமக்களிடம் எடுத்துரைக்கும் நோக்கில் நடைபெற்றது. பேரணியில் பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு, நாட்டு மாடு இனங்களை பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்து பல்வேறு கோஷங்களை எழுப்பினர். நாட்டு மாடு இனங்கள் விவசாயத்திற்கும், சுற்றுச்சூழல் சமநிலைக்கும் முக்கியமானவை என்பதையும், அவற்றை பாதுகாப்பது அனைவரின் கடமை என்பதையும் மாணவர்கள் பொது மக்களிடம் விளக்கினர்.

இந்த விழிப்புணர்வு பேரணி பள்ளி வளாகத்திலிருந்து தொடங்கி அந்தநல்லூர் பகுதிகளில் சுற்றி நடைபெற்றது. மாணவர்கள் கையில் விழிப்புணர்வு பதாகைகள் ஏந்தி நாட்டு மாடு இனங்களை பாதுகாக்கும் அவசியத்தை வலியுறுத்தினர்.

இந்த நிகழ்ச்சி மாணவர்களிடையே நாட்டு மாடு இனங்களை பாதுகாக்கும் எண்ணத்தை வளர்க்கவும், பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் உதவியாக அமைந்தது.

# அழிந்து போன இட்டேரி என்ற வண்டி பாதை?

இட்டேரி என்பது கொங்கு மண்டலத்தில் (நாமக்கல், சேலம், கரூர்) செல்லமாக சொல்லப்படும் வண்டி பாதை. விளைநிலங்களுக்கு செல்ல கூடிய வண்டி பாதையாகவோ அல்லது ஓத்தயடி பாதையாக இருக்கலாம்.






இந்த பாதையின் இருபுறங்களிலும் உயிர்வேலிகள் (செடி, கொடி, மரங்கள்) பாதுகாப்பு அரணாக இருக்கும். அதுவும் அடர்த்தியாக பசுமையாக பல்லுயிர் பெருக்கத்திற்கும் அதனை சமன்படுத்திட உயிர்வேலியாக அந்த காலத்தில் இருந்தது என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

இந்த பாதைகளில் பெரும்பாலும் காடுகள் விவசாய நிலங் களுக்கு மக்களால் பயன்படுத்திய மாட்டு வண்டி பாதையாகும். ஒரு காலத்தில் தமிழகத்தில் இருந்தது. இன்றைய கால போக்கில் அவை படிப்படியாக அழிந்து விட்டதால் வன விலங்கு களின் தொந்தரவு (மயில், காட்டுபன்றி, நரி, ஓணான், முயல்) தங்களுடைய இனப்பெருக்கத்தை இயற்கையிலே கட்டுப் படுத்த கூடிய வழிவகைகள் இல்லாத நிலையில் இன்று விவசாயிகளுக்கு எதிராக கிளம்பிவிட்டது பயிர்களை அழிக்க. அப்படிபட்ட இட்டேரியின் அமைப்பு செயல்பாடுகளை விரிவாக பார்ப்போம்.

## இட்டேரி அமைப்பு

இரண்டு விவசாய நிலங்களுக்கு இடையில் மாட்டு வண்டிகள் போறதுக்காக விடப்பட்ட குறுகிய வண்டி பாதை. இந்த பாதையின் இருபுறமும் இயற்கையான முறையில் பசுமை ததும்ப கூடிய அடர்த்தியான செடி, கொடிகள், மரங்கள் நிறைந்து இருக்கும். இது விளைநிலங்களுக்கு உயிர்வேலி யாக மட்டுமல்ல பல்லுயிர் பெருக்கத்திற்கும் சமன்படுத்திட உதவயாக இருக்க கூடியது.

## இதில் என்னென்ன மரங்கள் இருக்கும்?

அந்த அந்த மண் வகைகளை பொருத்து மாறுபடும். பெரும்பாலான இடங்களில் கிளுவை, கல்யாண முருங்கை, வேம்பு, பனை, மஞ்சணத்தி, சீமைக்கருவேல் போன்ற மரங்கள் இருக்கும். அதுமட்டுமல்ல ஆடாதோடா, நொச்சி, கள்ளி கற்றாழை, முசு முசுக்கை, தூதுவளை, கோவைக்காய் கொடி, பிரண்டை போன்ற கொடி வகைக்கள் இருந்தது. ஆடு மாடுகளுக்கு பசுந்தீவனமாகவும் மனிதர்களுக்கு மூலிகை கொடுக்க கூடிய இடமாக இருந்தது.

**வன விலங்குகளின் புகலிடம்?**

இட்டேரி வேலி வன விலங்குகளின் புகலிடமாகவும் பறவையினங்கள் உயிர்வாழ உதவிடுமிடமாக இருந்தது. மண் அரிமானம் காற்று தட்டுப்பாடக வும் விளங்கிய இந்த வேலி தற்போதைய கால கட்டத்தில இருந்த சுவடு கூட இல்லாத நிலையில் அழிந்துவிட்டன.


நவீன உழவு கருவிகள் அறுவடை இயந்திரங்கள் வருகையால் மாடுகளுக்கு வேலை இல்லாத நிலை ஏற்பட்டது போல உயிர் வேலிக்கு மாற்றாக முள்வேலி, சூரிய மின்சார வேலி போன்ற வேலிகள் நிலத்தை சுற்றி போடப்பபட்டதால் அந்த காலத்துல இட்டேரிகள் இன்றைய இளைய தலைமுறைகளின் கண்களுக்கு படாமே போய்விட்டது. இதை எண்ணி வாழும் முதிய விவசாயிகள் ஏக்க பெருமூச்சு விடுகின்றனர்.

காலம் மாற்றம் சுழன்றாலும் பழமைகளை பின்பற்று வோமாக.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

## தலைக் கவசம் உயிர்க் கவசம்





கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# பூனம்பாளையம் கால்நடைத் துறைக்கு RAWE வேளாண்மை மாணவர்கள் பயில்நடைப் பயணம்




திருச்சி, மார்ச் 16

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தனலக்ஷ்மி சீனிவாசன் பல்கலைக் கழகத்தின் இறுதி ஆண்டு வேளாண்மை மாணவர்கள், RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் ஒரு பகுதியாக பூனம்பாளையம் கிராமத்தில் உள்ள கால்நடை பராமரிப்புத் துறையை (Veterinary Discipline) பயில்நடைப் பயணமாகச் சென்று பார்வையிட்டனர்.

இந்தப் பயணத்தின் போது, கால்நடைத் துறையில் தற்போது நடைமுறையில் உள்ள பல்வேறு திட்டங்கள் குறித்து மாணவர்களுக்கு விரிவாக விளக்கப்பட்டது. கால்நடை பராமரிப்பு, நோய் தடுப்பு நடவடிக்கைகள், தடுப்பூசி திட்டங்கள், மற்றும் விவசாயிகளுக்காக செயல்படுத்தப்படும் அரசு நலத்திட்டங்கள் ஆகியவை பற்றி தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

மாணவர்கள் கால்நடை வளர்ப்பின் முக்கியத்துவம், விவசாயத்துடன் அதன் தொடர்பு மற்றும் கிராமப்புற பொருளாதார வளர்ச்சியில் அதன் பங்கு குறித்து அறிந்து கொண்டனர். இந்தப் பயணம் மாணவர்களின் நடைமுறை அறிவை மேம்படுத்தியதுடன், வேளாண்மை - கால்நடை ஒருங்கிணைந்த வளர்ச்சியைப் புரிந்துகொள்ள உதவியாக அமைந்தது.



# சொட்டு நீர் பாசனத்தின் நன்மைகள் பற்றி எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருச்சி, மார்ச் 16

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரத்தில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக் கழகத்தில் வேளாண் அறிவியல் பயிலும் இறுதி ஆண்டு மாணவர்கள் (B3 திருவெறும்பூர்). தங்கள் ஊரக வேளாண்மைப் பணி அனுபவத்தில், துவாக்குடியில் விவசாயி களிடம் சொட்டுநீர் பாசனம் முறை பற்றி கூறினர்.

**நன்மைகள்**

நீர் சேமிப்பு, அதிக மகசூல், உரப் பாசனம், களை கட்டுப்பாடு, வறட்சியை தாங்கும் திறன் மேம்படுத்துகிறது.

**மானியம் (Subsidy)**

சிறு/குறு விவசாயிகள் : 100% மானியம் (அதிகபட்சம் 5 ஹெக்டேர் வரை).

**பெரிய விவசாயிகள் :** 75% மானியம்

இது குறித்து மாணவர்கள் எடுத்துரைத்தனர்.




# ரோபாட்டிக்ஸ் மற்றும் பொறியியலில் பூச்சி அடிப்படையிலான பயோமிமெடிக் வடிவமைப்பு

**சுருக்கம்**

பயோமிமிக்ரி என்பது மேம்பட்ட தொழில்நுட்ப தீர்வுகளை உருவாக்க இயற்கையின் வடிவமைப்புகள் மற்றும் செயல் முறைகளைப் படிக்கும் ஒரு புதுமையான அறிவியல் அணுகுமுறையாகும்.





பூச்சிகள், அவற்றின் சிறிய அளவு இருந்த போதிலும், இயக்கம், உணர்தல் மற்றும் கூட்டு நடத்தைக்கு மிகவும் திறமை யான அமைப்பு களைக் கொண்டு உள்ளன.

இந்த இயற்கை வழிமுறைகள் ஆராய்ச்சியாளர்களை ஒத்த செயல்பாடுகளை பிரதிபலிக்கும் ரோபோக்கள் மற்றும் பொறி யியல் அமைப்புகளை வடிவமைக்க ஊக்கப்படுத்தி உள்ளன. பூச்சி அடிப்படையிலான பயோமிமெடிக் வடிவமைப்பு, ரோபோ செயல்திறன் மற்றும் தகவமைப்புத் திறனை மேம்படுத்த பூச்சி உடற்கூறியல், விமான முறைகள், இயக்க இயக்கம் மற்றும் திரள் நுண்ணறிவைப் புரிந்துகொள்வதில் கவனம் செலுத்து கிறது. ரோபோபீ மற்றும் ஆர்ஹெக்ஸ் போன்ற நவீன ரோபோ அமைப்புகள், சவாலான சூழல்களில் பூச்சியால் ஈர்க்கப்பட்ட கொள்கைகள் இயக்கம் மற்றும் செயல்திறனை எவ்வாறு மேம் படுத்த முடியும் என்பதை நிரூபிக்கின்றன. ரோபோட்டிக்ஸிற் கான உயிரியல் மாதிரிகளாக பூச்சிகளின் பங்கை இந்தக் கட்டுரை விவாதிக்கிறது மற்றும் நவீன பொறியியல் கண்டு பிடிப்புகளில் அவற்றின் வளர்ந்து வரும் செல்வாக்கை ஆராய்கிறது.

## அறிமுகம்

தொழில்நுட்ப வளர்ச்சிக்கு இயற்கை நீண்ட காலமாக உத்வேக மாக இருந்து வருகிறது. உயிரியல் மிமிக்ரி துறையில் உயிரியல் உயிரினங்களைக் கவனிப்பதும், பொறியியல் சிக்கல் களைத் தீர்க்க அவற்றின் கட்டமைப்புகள் மற்றும் செயல்பாடு களைப் பயன்படுத்துவதும் அடங்கும். பல்வேறு உயிரினங் களில், பூச்சிகள் அவற்றின் செயல்திறன், தகவமைப்பு மற்றும் மீள்தன்மை காரணமாக குறிப்பாக மதிப்புமிக்க மாதிரிகளாக நிரூபிக்கப்பட்டுள்ளன. தேனீக்கள், எறும்புகள், டிராகன் ஃபிளைகள் மற்றும் கரப்பான் பூச்சிகள் போன்ற பூச்சிகள் அசாதாரண திறன்களை வெளிப்படுத்துகின்றன.


அவற்றின் இறக்கைகள் சுறுசுறுப்பான மற்றும் ஆற்றல்-திறனுள்ள பறக்க உதவுகின்றன, அவற்றின் பல கால் உடல்கள் சீரற்ற நிலப்பரப்பில் நிலைத்தன்மையை வழங்குகின்றன, மேலும் அவற்றின் கூட்டு நடத்தை ஒரு குழுவாக சிக்கலான பணிகளைச் செய்ய அனுமதிக்கிறது.

விஞ்ஞானிகளும் பொறியாளர்களும் இந்த உயிரியல் பண்புகளை ஆய்வு செய்து ஒத்த திறன்களைப் பிரதிபலிக்கக் கூடிய இயந்திரங்களை வடிவமைக்கின்றன.

ரோபாட்டிக்ஸ், செயற்கை நுண்ணறிவு மற்றும் பொருள் அறிவியலில் முன்னேற்றங்களுடன், பூச்சிகளால் ஈர்க்கப்பட்ட தொழில்நுட்பங்கள் பெருகிய முறையில் நடைமுறைக்கு ஏற்ற தாகி வருகின்றன. இந்த அமைப்புகள் மனிதர்களுக்கு கடின மான அல்லது ஆபத்தான சூழல்களில் செயல்பட முடியும், இதனால் சுற்றுச்சூழல் கண்காணிப்பு, பேரிடர் மீட்பு மற்றும் விண்வெளி ஆய்வு போன்ற பகுதிகளில் அவை பயனுள்ளதாக இருக்கும்.

### பூச்சிகளால் ஈர்க்கப்பட்ட பறக்கும் வழிமுறைகள்

தேனீக்கள் மற்றும் தட்டான் பூச்சிகள் போன்ற பறக்கும் பூச்சிகள் குறிப்பிடத்தக்க பறக்கும் திறன்களை வெளிப்படுத்து கின்றன. அவற்றின் இறக்கைகள் வேகமாக துடிக்கின்றன, இதனால் அவை லிஃப்ட் உருவாக்கப்படுகின்றன, மேலும் அவை மிதக்க, சறுக்க மற்றும் திசையை விரைவாக மாற்ற அனுமதிக்கின்றன. மைக்ரோ-ஏர் வாகனங்கள் எனப்படும் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்ட ரோபோபீ ஒரு குறிப்பிடத்தக்க உதாரணம். இந்த சிறிய ரோபோ தேனீக்களின் படபடக்கும் இறக்கை இயக்கத்தைப் பிரதிபலிக்கிறது, இது ஒரு சிறிய அளவில் கட்டுப்படுத்தப் பட்ட பறப்பை செயல்படுத்துகிறது. இத்தகைய ரோபோக்கள் செயற்கை மகரந்தச் சேர்க்கை, சுற்றுச்சூழல் கண்காணிப்பு மற்றும் வரையறுக்கப்பட்ட இடங்களில் கண்காணிப்பு ஆகியவற்றில் உதவக்கூடும்.


தேனீ-ஈர்க்கப்பட்ட பறக்கும் ரோபோ (ரோபோபீ)

பூச்சிகளால் ஈர்க்கப்பட்ட விமான தொழில்நுட்பம், அதிக ஆற்றல் திறன் கொண்ட மற்றும் சிக்கலான சூழல்களில் செயல் படும் திறன் கொண்ட இலகுரக ட்ரோன்களின் வளர்ச்சிக்கும் பங்களிக்கிறது.

## பூச்சிகளால் ஈர்க்கப்பட்ட ரோபோக்களில் இயக்கம் மற்றும் இயக்கம்

கரடுமுரடான நிலப்பரப்பு, குறுகிய இடங்கள் மற்றும் செங்குத்து கட்டமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு மேற்பரப்புகளில் பூச்சிகள் மிகவும் திறம்பட நகரும். அவற்றின் பல கால்கள் கொண்ட உடல் அமைப்பு சமநிலை, நிலைத்தன்மை மற்றும் தகவமைப்புத் தன்மையை வழங்குகிறது.

ஒத்த இயக்கத் திறன்களைக் கொண்ட ரோபோக்களை உருவாக்க பொறியாளர்கள் இந்தக் கொள்கைகளைப் பயன்படுத்தியுள்ளனர். ஒரு நன்கு அறியப்பட்ட உதாரணம் மாசசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தில் உருவாக்கப்பட்ட யூக்ஷிளமு ஆகும். இந்த ஆறு கால் ரோபோ கரப்பான் பூச்சிகள் போன்ற பூச்சிகளின் இயக்கத்தால் ஈர்க்கப்பட்டு, குறிப்பிடத்தக்க நிலைத்தன்மையுடன் பாறைகள், மணல் மற்றும் குப்பைகள் வழியாக பயணிக்க முடியும்.

பாரம்பரிய சக்கர இயந்திரங்கள் நகர சிரமப்படக்கூடிய பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இத்தகைய ரோபோக்கள் குறிப்பாக பயனுள்ளதாக இருக்கும். கடினமான நிலப்பரப்பில் செல்ல அவற்றின் திறன் அவற்றை தேடல் மற்றும் மீட்பு பணிகள் மற்றும் ஆய்வுக்கு மதிப்புமிக்க கருவிகளாக ஆக்குகிறது.

### திரள் நுண்ணறிவு மற்றும் கூட்டு நடத்தை

பூச்சி நடத்தையின் மற்றொரு கவர்ச்சிகரமான அம்சம் திரள் நுண்ணறிவு. எறும்புகள் மற்றும் கரையான்கள் போன்ற பூச்சிகள் மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாடு இல்லாமல் சிக்கலான பணிகளைச் செய்ய பெரிய குழுக்களாக ஒன்றிணைந்து செயல்படுகின்றன. ஒவ்வொரு தனிநபரும் எளிய விதிகளைப் பின்பற்றுகிறார்கள்.




ஆராய்ச்சியாளர்கள் இந்தக் கருத்தை திரள் ரோபாட்டிக்ஸில் பயன்படுத்தியுள்ளனர், அங்கு பல ரோபோக்கள் ஆய்வு, மேப்பிங் அல்லது கட்டுமானம் போன்ற பணிகளைச் செய்ய ஒத்துழைக்கின்றன. ஒருவருக்கொருவர் தொடர்புகொள்வதன் மூலமும், மாறிவரும் நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றுவதன் மூலமும், இந்த ரோபோ திரள்கள் ஒரு ரோபோவால் அடைய கடினமாக இருக்கும் பணிகளை முடிக்க முடியும். சுற்றுச்சூழல் கண்காணிப்பு, விவசாயம், கிடங்கு ஆட்டோமேன் மற்றும் கிரக ஆய்வு ஆகியவற்றில் கூட திரள் ரோபாட்டிக்ஸ் சாத்தியமான பயன்பாடுகளைக் கொண்டுள்ளது.

**முடிவுரை**

ரோபாட்டிக்ஸ் மற்றும் பொறியியலில் பூச்சி அடிப்படையிலான உயிரிமிமெடிக் வடிவமைப்பு ஒரு முக்கியமான துறையாக மாறியுள்ளது. பூச்சிகளின் கட்டமைப்புகள் மற்றும் நடத்தை களைப் படிப்பதன் மூலம், விஞ்ஞானிகளும் பொறியியலாளர் களும் திறமையான, தகவமைப்புக்கு ஏற்ற மற்றும் சவாலான சூழல்களில் செயல்படும் திறன் கொண்ட புதுமையான தொழில்நுட்பங்களை உருவாக்க முடியும். பல பாரம்பரிய இயந்திரங்களுடன் ஒப்பிடும்போது பூச்சிகளால் ஈர்க்கப்பட்ட ரோபோக்கள் மேம்பட்ட இயக்கம், ஒருங்கிணைப்பு மற்றும் ஆற்றல் திறனைக் காட்டுகின்றன.

உயிரிமெட்ரிக் துறையில் ஆராய்ச்சி தொடர்ந்து முன்னேறி வருவதால், பூச்சிகளால் ஈர்க்கப்பட்ட தொழில்நுட்பங்கள் நிஜ உலக சவால்களைத் தீர்ப்பதில் பெருகிய முறையில் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பேரிடர் பதில் மற்றும் விவசாயம் முதல் விண்வெளி ஆய்வு வரை, இயற்கையிலிருந்து கற்றுக்கொள்வது எவ்வாறு நிலையான மற்றும் புதுமையான பொறியியல் தீர்வுகளுக்கு வழிவகுக்கும் என்பதை இந்த உயிரி–ஈர்க்கப்பட்ட அமைப்புகள் எடுத்துக்காட்டுகின்றன.

“இயற்கையைப் பின்பற்றும் தொழில்நுட்பமே மனித முன்னேற்றத்தின் அடிப்படை”.



கட்டுரை ஆசிரியர் : *ச.பூர்ணிமா, உதவிப் பேராசிரியர் (பூச்சியியல்), பயிர் பாதுகாப்புத்துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு. மின்னஞ்சல் : poorny29@gmail.com.*

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**